RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s858

# தொல்காப்பியம் புலப்படுத்தும் நிரை கவர்தலும் மீட்டலும்

பெ. மாலையம்மாள் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்-627802, தமிழ்நாடு, இந்தியா.

# Cattle-Lifting and the Retrieval of the Same as Indicated in Tholkappiyam

**P. Malaiammal** [a, *]

[a] Department of Tamil, Sri Parasakthi College for Women, Courtallam-627802, Tamil Nadu, India

* Corresponding Author: baraniyazhini@gmail.com

Received: 19-04-2021
Revised: 14-06-2022
Accepted: 17-06-2022
Published: 20-08-2022

Check for updates

**ABSTRACT**

Tholkappiyam is the primary book that reveals the life and culture of the ancient Tamils. The Purathinai is the elaboration of the messages of the war life and fame of the ancient Tamils. That is to say, an individual's education, charity, fame, heroism, etc., by name so that others may know it. War has been going on since the creation of the world to the present day. Wild animals fight for their own needs and self-defense. A man who is not civilized fights because of his greed for the earth, his lust for gold, and his greed for women. Tolkappiyar was the first to describe such wars in his grammar book by dividing them into vetchippor, vanchippor, uzhinaippor, and thumpaippor. Among them, this article deals with cattle lifting and retrieval of the same in the vetchippor. This article also aims to see the features of ancient warfare shown by Tolkappiyar through the Purathinai.

**Keywords:** Tholkappiyam, Tolkappiyar, Purathinai, Ancient Tamil

## முன்னுரை

இன்று நாம் காணும் இவ்வுலகமே மக்கள் இனம் மற்ற உயிரினங்களுடனும், இயற்கையுடனும் ஓயாது போராடிப் பெற்றதன் பயன் ஆகும். போர் புரியாத உயிரினங்கள் இப்பூமியில் இல்லை. பனி தவழும் மலையில் எல்லைப்போர், இன்று சீன இந்திய எல்லை லடாக் போர். மேலும் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த இடைப்பட்ட பகுதியிலும் இன்று உலக நாடுகள் அனைத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. உலகம் தோன்றியது முதல் இன்று வரை போர் என்பது தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. காட்டு விலங்குகள் தன் தேவைக்காகவும், தற்காப்புக்காகவும் போர் புரிகின்றன. "நாகரிக நெறிகற்ற மனிதன் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையின் காரணமாகப் போர் புரிகின்றான். தொல்காப்பியர் முதன் முதலில் இத்தகைய போர்கள் பற்றி தன் இலக்கண நூலில் வெட்சிப்போர், வஞ்சிப்போர், உழிஞைப்போர், தும்பைப்போர் எனப் பாகுபடுத்திக் கூறியுள்ளர்" (Thirugnana Saambantham, 2010). அவற்றுள் வெட்சிப் போரில் நிரை கவர்தல், மீட்டல் போர் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## குறிஞ்சி நிலம்

தமிழகத்து நிலங்கள் ஐவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிஞ்சி நிலம் முதன் முதலில் தோன்றிய நிலம் ஆகும்.

'பொய் அகல, நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்?

வையகம் போர்த்த, வயங்கு ஒலிநீர் கையகலக்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு

முன்தோன்றிய மூத்த குடி!"

என்கிறது, புறப்பொருள் வெண்பாமாலை (Thirugnana Saambantham, 2010). 'கல்' என்பது மலையைக் குறிக்கும். நீரால் சூழப்பட்ட இவ்வுலகில் மெல்ல மெல்லத் தன்னை வெளிக்காட்டியது மலை. எனவே 'கல்' தோன்றி மண் தோன்றா காலத்தே என்கிறார். சேயோன் மேய மைவரை உலகம் என்கிறது. தொல்காப்பியம் மலைகளை எல்லையாகக் கொண்டது குறிஞ்சி நிலமாகும்" (Govindan, 2003).

நிலங்களுள் குறிஞ்சி நிலமே முதலில் தோன்றியது. மக்கள் தங்கள் வாழ்க்கையை முதன் முதலில் தொடங்கிய இடமும் குறிஞ்சி நிலமே ஆகும். அங்கு மக்கள் இயற்கையில் கிடைக்கும் பொருட்களையும், வேட்டையாடுதல் மூலம் பெறப்பட்ட பொருட்களையும் கொண்டு தன் உணவுத் தேவையை நிறைவு செய்து கொண்டனர். காட்டைத் திருத்தி தினை, ஐவன நெல் போன்றவற்றைப் பயிரிடவும் கற்றுக் கொண்டான். இருப்பினும் அலைந்து திரிந்து வேட்டையாடுதல் முதன்மை பெற்றது.

## முல்லை நிலம்

தமிழ் நிலப் பாகுபாட்டுள் காடும், காடு சார்நத நிலப்பகுதி முல்லை என்றாயிற்று. இதனை ஷமாயோன மேய காடுறை உலகமும்| என்கிறது. தொல்காப்பியம். முல்லை நில மக்கள் ஆடு, மாடுகளைப் பெருவாரியாக வளர்த்தனர். முதன் முதலில் மாடு என்பது சொத்தாகக் கருதப்பட்டது. முல்லை நிலத்தில் தான். இனக்குழுக்கள் தனித்தனி குடும்ப முறைகளாக உருவானது முல்லை நிலத்தில்.

### சிறப்பு

பண்டை காலத்தில் முல்லை நில மக்கள் ஆடு, மாடுகளை அதிகமாக வளர்த்தனர் என்றும் ஆட்டை விட 'மாடு' செல்வமெனக் கருதினர்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு

மாடல்ல மற்றை யவை”

எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் (Chidambaranar Samy, 2015). முல்லை நில மக்கள் ஆடு, மாடுகளை மேய்த்தல், பாதுகாத்தல் தொழிலை மேற்கொண்டனர். மாடு இங்கு சொத்தாகக் கருதப்பட்டது. வேட்டையாடுதலுக்காக குறிஞ்சி நில மக்கள் நிரைகளை கவர நேர்ந்த போது ஏற்பட்டதே முதற்போர். இதனை நிரை கவர்தல், மீட்டல் என்னும் வெட்சிப் போரினுள் அடக்குவார் தொல்காப்பியர்.

### நிரை கவர்தல்

வேட்டையாடுதல் மூலம் உணவு தேடி அலையும் குறிஞ்சிக்கானவர் மலையடிவார மக்களின் நிரைகளை வேட்டையாடினார். தேவைக்காக வேட்டையாடுதல் என்னும் நிலை மாறி ஆநிரைகளைக் கவர்தல் என்ற போரின் தொடக்க நிலைக்கு மாறின.

### மண்ணாசை

ஆநிரைகளைக் கவர்ந்த வேந்தன் மண்ணாசை கொள்கிறான். ஆதலால், போருக்கான அடிப்படைக் காரணங்களில் முதன்மையானதாக மண்ணாசை உருவெடுக்கிறது. வேற்று நாட்டு ஆநிரைகளை வேந்தன் ஆணைப்படி வீரர்கள் கவர்ந்து வருவர். அதன் பின்னர் நாட்டைக் கைப்பற்றுவர்.

### வெட்சிப்போர்

வேற்று நாட்டு ஆநிரைகளைக் கவர்தல், வெட்சிப் போரின் முதன் நிலையாகும். இதன் காரணமாக பெருஞ்செல்வமெனக் கருதப்பட்ட ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வீரர்களைக் கொன்று ஆநிரைகளை மீட்டுக் கொணரும் போரினைப் பற்றி, "ஆநிரை என்ற சொத்துரிமை பெற்ற மலையடிவார மக்களுக்கும் அத்தனிச் சொத்துரிமை பெறாத உணவு தேடும் வாழ்க்கையை வாழ்ந்த குறிஞ்சி நில மக்களுக்கும் இடையில் நிகழ்ந்த போர்" என சுபா சந்திரபோஸ் தன் உரையில் குறிப்பிடுகிறார் (Suba Chandra Bose, 2016).

## போரின் தொடக்கம்

வேந்தன் ஆணைப்படி ஆநிரைகளைக் கவர்தல் போரின் தொடக்கம் ஆகும். அடையாளமாக வெட்சிப் பூவினைச் சூடுவர். பிறர் அறியாதபடி வேற்று நாட்டு ஆநிரைகளைக் கவர ஊர்ப் புறத்திலே கூடினார் என்பதனை,

"வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்

ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்"

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் (Suba Chandra Bose, 2016).

## சகுனம் பார்த்தல்

ஊர் புறத்தே கூடிய வெட்சி போர் மறவர்கள் தாம் கருதிய செயல் வெற்றி தருமா? அல்லது தோல்வியைப் பெறுமா? என சகுனம் பார்த்தனர். அவ்வழியே செல்வோர் நல்ல சொற்கள் பேசினாலோ, பறவைகள் ஒலி எழுப்பினாலோ போகும் காரியம் வெற்றி பெறும் என நம்பினர். இதனை,

"எழுவணி சீறூர் இருள்மாலை முற்றில்

குழுவினம் கைகூப்பி நிற்பத் - தொழுவில்

குடக்கள்ளுக் கொண்டுவா என்றாள் குனிவில்

தடக்கையாய் வென்றி தரும்"

எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது (Swaminatha Iyer, 2014).

## வேவு பார்த்தல்

பகை நாட்டிற்குச் சென்று அங்குள்ள நிலைகளைப் பற்றி தெரிந்து உரைப்பது 'வேவு' பார்த்தல் ஒற்றர் கடமை ஆகும். பகை நாட்டார் ஒற்றர் அறியாதபடி மறைந்து பார்வையிடும் வழக்கம் அன்று தொட்டு இன்றுவரை வழக்கத்தில் உள்ளது. இதனை,

"புடைகெட ஒற்றின் ஆகிய வேய்" என்கிறார் (Suba Chandra Bose, 2016).

'நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற

சிலையும் செருமுனையுள் வைகி - இலை புனைந்த

கள்அவிழ் கண்ணிக் கழல் வெய்யோய்! சென்று அறிந்து

நள் இருட்கண் வந்தார் நமர்."

எனப் புறப்பொருள் வெண்பாமாலை 'ஒற்றர்' எவ்வாறு ஒற்றறிந்து வந்தார் எனக் குறிப்பிடுகிறது (Suba Chandra Bose, 2016).

## சுற்றி வளைத்தல்

வேந்தன் ஆணைப்படி ஆநிரை கவரச் சென்ற வீரர்கள் 'ஒற்றர்' குறிப்பிட்ட பகைநாட்டு எல்லையைச் சுற்றி வளைத்து முற்றுகையிடுவர். இதனை, ஒற்றின் புறத்திறை என்பார் தொல்காப்பியர், இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை.

"ஒற்றினான் ஒற்றி உரவோர் குறும்பினைச்

சுற்றினார் போகாமல் சூழ்ந்து"

எனக் குறிப்பிடுகிறது (Swaminatha Iyer, 2014). பகை நாட்டைச் சுற்றி வளைத்து எல்லையின் புறத்தே ஆநிரைகள் இருக்கும் இடத்தில் காவல் புரியும் கரந்தை மறவர்களைக் கொன்றனர்.

### கோள்

வெட்சி மறவர்கள் பகை நாட்டிரைப் போரில் கொன்று ஆநிரை எவ்வித தீங்குமின்றி தம் நாட்டிற்கு ஓட்டிச் சென்றனர். இதனைப் புறப்பொருள் வெண்பா மாலை

"கொடுவரி கூடிக் குழூ(உ)க் கொண்(டு) அனைத்தால்

நெடுவரை நீள்வேய் நரலும் - நடுவூர்க்

கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற

நிணநிரை வேலார் நிலை"

எனக் குறிப்பிடுகிறது (Azhwargal Aaivu Maiyam, 1995).

### ஊரார் எதிர்பார்த்தல்

ஆநிரைகளைக் கவரச் சென்ற வெட்சி மறவர்கள் பற்றி மக்கள் பலவாறு தம்முள் பேசிக் கவலையுடன் எதிர்நோக்கிக் காத்திருந்தனர். அவர்கள் வருத்தம் நீங்கும்படி ஆரவாரத்துடன் ஆநிரைகளை ஊர்ப்பொது மன்றத்தில் நிறுத்தினர்.

## ஆநிரைகளைப் பகிர்தல்

வெட்சி வீரர்கள் கைப்பற்றி கொண்டு வந்த ஆநிரைகளை ஊரின் நடுவே நிறுத்தினர். வெட்சி வேந்தன். வீரர்கள் அவரவர் தகுதிக்கேற்ப ஆநிரைகளைப் பகிர்ந்தளித்தான். இதனைப் 'பாதீடு' என்பர்.

"ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்(று)ஆய்ந்(து) உரைத்தார்க்கும்

புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை

மாறுஅட்ட வென்றி மறவர்தம் சீறூரில்

கூறுஇட்டார் கொண்ட நிரை"

என்று குறிப்பிடுகிறது புறப்பொருள் வெண்பா மாலை (Venkatasami nattar, 2008). நிரைகவர்தலில் ஈடுபட்ட போர் மறவர்கள், ஒற்று அறிந்து கூறிய ஒற்றர்கள், நிமித்தம் கூறிய அறிஞர் என இன்ன பிறர்க்கும் ஆநிரைகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

### கள்ளுண்டு களித்தல்

ஆநிரைகளைக் கவர்ந்து வென்ற வெட்சி மறவர்கள் கள்ளுண்டு மகிழ்தல், இதனை தொல்காப்பியர் உண்டாட்டு என்பர். இதனை,

"வெண்கோள் தோன்றாக் குழிசியொடு"

என மதுவுண்டு வீரர்கள் மனகளிந்து ஆடுதல் பற்றி புறநானூறு கூறுகிறது (Swaminatha Iyer, 2014).

## போர் மறவர்களின் சிறப்பு

பண்டைய போர் மறவர்கள் அவர்களின் மனத்துள் அடங்கிக் கிடக்கும் மனவுணர்வை வெளிக்கொணர ஷதுடி| எனும் இசை எழுப்பப்படுகிறது. இன்றும் கோயில் திருவிழாக்களில் ஊர் புறங்களில் துடி எழுப்புதல் நிகழ்வால் சாமி வந்து ஆடுவதனைக் காண முடிகிறது. போர் மறவர்களின் வெற்றித் தெய்வமாகிய கொற்றவைக்கு துடி கொட்டி போர் மறவர்கள் கொண்டாடுவர். போரில் இறந்துவிட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு சிறப்பிக்கும் வழக்கம் இருந்தது. இதனை தொல்காப்பியம்,

“காட்சி கால்கோள் நீர்படை நடுதல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று மரபின் கல்லொடு புணரச்

சொல்லப் பட்ட எழுமூன்று"

என்று குறிப்பிடுகிறது (Suba Chandra Bose, 2016).

## நிரை மீட்கச் சொல்லுதல்

வெட்சி மறவர்கள் அரண் தந்து நிரைகாத்த சிறுபடையை அழித்துவிட்டு ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர். இதனை அறிந்த கரந்தை வீரர்கள். வேலனுக்கு வெறியாடல் நிகழ்த்தினர். காந்தள் மலர் சூடி, வள்ளி என்னும் ஒரு வகைக் கூத்தினை ஆடினர். பின்பு உன்ன மரத்தின் செழுமை பற்றி அறிந்து ஆநிரைகளை மீட்கப் புறப்பட்டனர். இதனைப் பற்றி

'நாடுமுலை அன்ன நனும் பூங்கரந்தை"

என்று புறநானூறு குறிப்பிடுகிறது (Swaminatha Iyer, 2014).

### நிரை மீட்டல்

வெட்சி வீரர்களை தான் ஒருவனாக நின்று வென்ற வீரனை ஷஆள் எறிப்பிளை | என்றும், வெட்சி வீரர்களின் ஷகுடல் சரிந்த கொற்றம் மிக்க வேல் ஏந்தி வரும் கரந்தை மறவர் செயல் ஷபிள்ளையாட்டு| என்றும் கரந்தை மறவர்களின் போர்திறம் போற்றப்படுகின்றன. வெட்சி மறவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்து, தன்னிடம் உள்ள பேராற்றல் முயற்சியுடன் வஞ்சினம் உரைத்து தார் படை ஆற்றலுடன் போர் புரிந்து ஆநிரைகளை மீட்டுக் கொண்டு வந்தனர்.

## நடுகல்

ஆநிரைகளை மீட்டு கரந்தைப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்கு நடுகல் செய்து சிறப்பித்தனர். சிறந்த கலைத் தேர்ந்து அதனை நீரிலிட்டு தூய்மைப்படுத்தி, மலர்தூவி படையில் செய்து வழிபட்டனர். புறப்பொருள் வெண்பாமாலை,

“பூவோடு நீர் தூவி பொங்க விரைபுகைத்து

நாவுடை நன்மணி நன்(கு) இயம்ப - மேவார்

அழல் மறங் காற்றி அவிந்தாற்(கு) என்(று) ஏத்திக்

கழல் மறவர் கைக்கொண்டார் கல்"

என்று குறிப்பிடுகிறது (Swaminatha Iyer, 2014). மேலும் இதனை,

“மறவர் பெயரும் பீடும் எழுதி" (Venkatasami nattar, 2008)

என்று அகநானூறும்,

“உயர் இசை வெறுப்பத் தோன்றிய பெயரே” (Swaminatha Iyer, 2014)

எனப் புறநானூறும்

“பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதிய நட்ட கல்"

என்று திருமுருகாற்றுப்படையும் நடுகல் சிறப்பினை விவரிக்கின்றன (Azhwargal Aaivu Maiyam, 1995).

நடுகல் வழிபாடே பிற்காலத்தில் குலதெய்வ வழிபாடாக பரிணாமம் பெற்றன. இன்றுவரை ஊர் தோறும் நடைபெறும் திருவிழாக்கள் நடுகற்களாகப் போற்றப்படும் நம் முன்னோர் வழிபாடேயாகும்.

## முடிவுரை

பண்டைய போர்முறையின் தோற்றமான நிரைகவர்தல், மீட்டல் ஒரே நிலப்பகுதியாகும். குறிஞ்சி நில மலைப்பகுதி மக்களும், மலையடிவரை முல்லை நில மக்களுக்கும் இடையே நிகழ்ந்த நிரை கவர்தல், மீட்டல் தமிழரின் பண்டைய போர் சிறப்பினையும், புகழ் வாழ்வினையும் சித்தரிப்பதாக அமைகின்றது.

## References

Azhwargal Aaivu Maiyam, (1995) Thirumurugatrupadai, Mulai Nilaiyam, Chennai, India.

Chidambaranar Samy, (2015) Thirukkural Thelivurai, Arivu publications, Chennai, India.

Govindan, (2003) Pandai Tamilar Poor Neri, Aganazhigai pathippagam, Chennai, India.

Suba Chandra Bose, S., (2016) Tholkappiyam Porulathikaram, New Century book House, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (2014) Purananooru Moolam Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Thirugnana Saambantham, S., (2020) Tholkappiyam, Kadhir Pathippagam, Thiruvaiyaru, India.

Venkatasami Nattar, N.M., (2008) Agananooru, Ramaiya pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License